**<u>IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, KARUR.</u>**

**<u>MCOP.NO. 145/ 2024</u>**

Deposition of PW - 1 solemnly affirmed by S.Vidya Priya, Bench Clerk Grade-II of this court on 11.02.2026 in accordant with provisions of XLIV of 1989.

| | | | |
|---|---|---|---|
| Name | : பாலகிருஷ்ணன் | Age | : |
| Father's Name | : வெள்ளையப்பன் | Village | : |
| Calling | : | Taluk | : |

**<u>1–ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

விபத்தில் சம்பந்தப்பட்ட வாகனத்திற்கு முறையான ஆவணங்கள் இருந்தது என்றும், இழப்பீடு வழங்கவேண்டும் என்றால், அதை 2–ம் எதிர்மனுதாரர்தான் வழங்கவேண்டும் என்றால் அதை பற்றி எனக்கும் தெரியாது.

**<u>2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

விபத்தில் எனக்கு ஏற்பட்ட காயங்கள் குணமடைந்துவிட்டது. காலில் எனக்கு எலும்பு முறிவு ஏற்பட்டது என்றால் அவ்வாறு இல்லை. முகத்தின் வலது பக்கம் எலும்பு முறிவு ஏற்பட்டது. தற்போது எலும்பு கூடிவிட்டது என்றால் அவ்வாறு இல்லை. விபத்து சமயத்தில் TVS 50 வாகனத்தை ஓட்டி சென்றேன். என் மீது டாடா ஏசி வாகனம் மோதியது. அந்த வண்டியின் பதிவெண் ஞாபகம் இல்லை. பள்ளமருதபட்டி–எருமைக்காரன்புதுார் செல்லும் சாலையில் விபத்து ஏற்பட்டது. விபத்து பகலில் நடைபெற்றது. டாடா ஏசி வாகனம் எனக்கு முன் பக்கமாக மோதியது. நான் சரியாகத்தான் பயணம் செய்தேன். எதிரில் வந்த வாகனம்தான் தவறான சாலையில் வந்து மோதிவிட்டது. விபத்து தார் சாலையில் நடைபெற்றது என்றால் சரிதான்.

எனக்கு ஓட்டுநர்உரிமம் இல்லை. எனக்கு தலையில் காயம் ஏற்பட்டதிலிருந்து விபத்து சமயத்தில் நான் தலை கவசம் அணியாததால்தான் என்றால் சரியல்ல. நான் தலை கவசம் அணிந்துதான்சென்றேன். அது சேதம் அடைந்து எனக்கு வலது கண்ணுக்கு கீழ் காயம் ஏற்பட்டது. காவல்நிலையத்தில் நான்தான் புகார் கொடுத்தேன். நான் தாக்கல் செய்துள்ள மருத்துவ பில்கள் இந்த வழக்கிற்காக தயார் செய்து தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எனது வயது, வருமானம், வயது, தொழில் ஆகியவற்றை நிரூபிக்கவில்லை என்றால் சரியல்ல. நான் தற்போது எந்த வேலைக்கும் செல்லவில்லை. விபத்திற்கு முன்பு நான் எந்த வேலைக்கும் செல்லவில்லை என்றால் சரியல்ல. எதிரில் வந்த வாகனத்தை கவனிக்காமல், உரிய ஓட்டுநர்உரிமம் இன்றி, தலை கவசம் அணியாமல் சாலைவிதிகளை பின்பற்றாமல் அதிக வேகமாக சென்று இந்த விபத்தை ஏற்படுத்திக் கொண்டேன் என்றால் சரியல்ல. நான் கேட்டுள்ள இழப்பீடு மிகவும் அதிகம் என்றாலும், அது கிடைக்கத்தக்கதல்ல என்றாலும், விபத்திற்கு என்னுடைய அஜாக்கிரதைதான் காரணம் என்றால் சரியல்ல.

(ஓம்.என்.எஸ்.ஜெயபிரகாஷ்)
தலைமை குற்றவியல் நடுவர்,
கரூர்.